**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.5
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கஸ்வரன் | -- | |
| Father's Name | ராமர் | Calling | கிரேடு 1 நிலை காவலர் |
| Village | ராஜபாளையம் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of March 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் டிராபிக்கில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக நான் பணிபுரிந்தபோது 24.09.2022ம் தேதி மாலை 06.30 மணியளவில் ராஜபாளையம்– தென்காசி மெயின்ரோட்டில் என் டி ஆர் சூப்பர் மார்க்கெட் அருகில் வனவேங்கை கட்சியை சேர்ந்த சிலர் நரிக்குறவர், குருவிகார பிரிவினரை பழங்குடி பிரிவில் சேர்ப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியதுபோல் குறவர் இனத்தையும் பழங்குடியினர் இனத்தில் சேரக்கவேண்டும் என்று கூறி ஆர்ப்பாட்டம் செய்துக்கொண்டிருந்தார்கள். அதனால் அப்பகுதியில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது. அப்போது நானும் உதவி ஆய்வாளர் மூவேந்தன், சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமை காவலர் மாரிபூபதி, தெற்க காவல் நிலைய காவலர் மணிராஜ், முதல்நிலை காவலர் செல்லபாண்டி, ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்துபோக சொன்னோம். அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றார்கள். ஆரப்பாட்த்தில் ஈடுபட்டவர்கள் பற்றி விசாரித்தபோது அவர்கள் பெயர் சஞ்சய், காளிராஜ், கடற்கரை, ராம்குமார், பாலமுருகன் மகன் முத்துபாண்டி, சண்முகவேல், ராஜா, பூமிராஜா, ஞானசேகர், முருகன், சஞ்சீவ் ராஜ், கந்தன் மகன் முத்துபாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து என்று தெரியவந்தது. அவர்கள் அனைவரும் ராஜபாளையத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது. கலைந்து சென்றவர்களில் சுமார் 30 நபர்கள் அன்ற இரவு 07.00 மணியளவில் தென்காசி ரோட்டிலுள்ள பாம்பே லாட்ஜ் அருகில் ஒன்று கூடினார்கள். அவர்கள் கைகளில் கற்கள் வைத்திருந்தார்கள். அதில் காளிராஜ், பாலமுருகன், முத்துபாண்டி, முருகன் ஆகியோர்கள் தலைமை காவலர் மணிராஜ் மற்றும் முதல் நிலை காவலர் செல்லபாண்டி

ஆகியோர்களை பார்த்து போலீஸ்கார தேவடியா மகன்களா கூதிகாரன்களா என்று அசிகங்கமாக திட்டினார்கள். அப்போது பணியிலிருந்த நாங்கள் அவர்களிடம் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்றும் கலைந்து செல்லுங்கள் என்று மீண்டும் கூறினோம். அப்போது சஞுசீவ் ராஜ், கந்தன் மகன் முத்துபாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து ஆகியோர் தலைமை காவலர் மணிராஜ் முதல்நிலை காவலர் செல்லபாண்டி ஆகியோர்களை கிழே தள்ளிவிட்டு மறுபடியும் போலீஸ்கார தேவடியா மகன்களா நீங்கள் என்னடா எங்களை கலைந்துபோக சொல்வது என்று சொல்லி அவர்கள் கைகளில் வைத்திருந்த கற்களால் எங்களை நோக்கி மாறி மாறி வீசினார்கள். நாங்கள் விலகி விட்டோம். அவ்வாறு விலகாமல் இருந்தால் எங்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். ஆயினும் அவர்கள் எரிந்த கற்கள் மணி ராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகியோர் மீது பட்டு மணிராஜ்க்கு இடது பக்க தலை, வலது கை முட்டி, இடது தோள்பட்டைக்கு கீழ் மற்றும் வலி காயம் எற்பட்டது. செல்லபாண்டிக்கு வலதுபக்க கால் பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் மறுபடியும் அவர்களை கலைந்துபோக சொன்னபோது காளிராஜ் மற்றும் சண்முகவேல் அங்கிருந்த மற்றவர்களை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். காயப்பட்ட மணிராஜ் மற்றும் செல்லபாண்டி ஆகியோர்களை ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் என்பவர் ஒரு ஆட்டோவின் மூலம் ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கூட்டி சென்றார். இது சம்பந்தமாக தலைமை காவலர் மணிராஜ் என்பவர் புகார் கொடுத்தார். அவர்கள் எறிந்த கற்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். மேற்படி கற்கள் சாபொ1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டதுதான். சம்பவம் நடைபெற்று 3 வருடங்கள் ஆகிவிட்டதால் சம்பந்தப்பட்ட நபர்களை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது. இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

சம்பவ நடைபெற்ற இடம் மக்கள் நடமாட்டம், போக்குவரத்து அதிகமுள்ள இடம் ஆகும். அந்த இடத்தில் ராஜபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் போக்குவரத்து சிக்னல் உள்ளது. அந்த இடத்தில் எப்போதும் 2, 3 காவலர்கள் இருப்பார்கள். போராட்டம் சுமார் 40 பேர் செய்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகள் குறித்த விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அதன் பிறகு விசாரித்தோம். மணிராஜ் மற்றும் செல்லபாண்டியை நான் மருத்துவமனைக்கு நான் அழைத்து செல்லவில்லை. அவர்களுக்கு காயம் இருந்தது என்பது சம்பவ இடத்தில் வைத்துதான் தெரியும். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் காவல் துறையினரை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு முதல்நாள் மலையடிப்பட்டியில் இதே கோரிக்கையை வலியுறுத்தி ஒரு போராட்டம் நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. அந்த போராட்டத்திற்கு சுமார் 300 நபர்கள்

கலந்துக்கொண்டார்கள் என்றால் நினைவில்லை. எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of March 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**